கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, திட்டக்குடியிலுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கிற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவியினுடைய இந்த அரசு, தமிழ்நாட்டில், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் கடனுதவியுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 40 வட்டங்களில் செயல்முறை கிடங்குகள் கட்ட திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதிக்குட்பட்ட திட்டக்குடியும் இடம் பெற்றுள்ளது. எனவே, திட்டக்குடி வட்டத்தில் கிடங்கு கட்டத் தகுதியான நிலம் கிடைக்கப்பெற்றபின் நிதி வசதிக்கேற்ப கிடங்கு கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

9—

முத்திரைத்தாள்

***9858—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி, அம்பத்தூர் ஆகிய தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் முனைவோர்கள், முத்திரைத்தாள் அதிக விலைக்கு வாங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிற்பேட்டை இடங்களுக்கு முத்திரைத்தாள் விலக்கு அளிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் முனைவோர்கள் அதிக விலைக்கு முத்திரைத்தாள் வாங்குவதில்லை.

2002 அக்டோபர் 25]

(ஆ) பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட பகுதிகளிலுள்ள சிட்கோ, சிப்காட் போன்ற அரசு நிறுவனங்களால் சிறுதொழில் முனைவோருக்கு எழுதிக் கொடுக்கப்படும் தொழில் மனைகள் மற்றும் கூடங்களுக்கான கிரயம் மற்றும் குத்தகை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விதிப்பிலிருந்து முழு விதிவிலக்கு 25-1-2000 முதல் 24-1-2002 வரை வழங்கப்பட்டது. இச்சலுகையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்புச் செய்வதோடு எல்லாப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென கோரிக்கைகள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5, 6 ஆண்டுகாலமாக தொழில் துறை கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலும், சிறுதொழில் முனைவோர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கடந்த காலத்தில், 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் தொழிற்பேட்டைகளில் நிலம் வாங்குவதற்கு-வாங்கவோ, விற்கவோ செய்பவர்களுக்கு ஒரு சதவீதம்தான் முத்திரைத்தாள் வாங்க வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் கடந்த ஆட்சியில் அதை 13 சதவீதம் என்றும், குறிப்பாக கிண்டிக்கு 13 சதவீதம் என்றும், அம்பத்தூர் போன்ற பகுதிகளுக்கு 10 சதவீதம் என்றும், பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற தொழிற்பேட்டைகளில், அந்தந்த மாவட்டங்களுக்குத் தகுந்தவாறு முத்திரைத்தாள் வாங்க வேண்டும் என்ற கடுமையான ஆணை போடப்பட்டது. நாங்கள் அன்றைய சிறுதொழில் துறை அமைச்சரை, மரியாதைக்குரிய பெரியசாமி அவர்களைப் பலமுறை நேரில் சந்தித்து, அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டபோதுகூட, நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உதாரணத்திற்கு, கிண்டியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அங்கே இன்றைக்கு, கிண்டி தொழிற்பேட்டையில் சிட்கோ எங்களுக்குத் தந்த விலை 68,000 ரூபாய். ஆனால், இன்றைக்கு அதனுடைய நிர்ணய விலை, அரசு விலை 33 இலட்சம் ரூபாய். இது எப்படி போடப்பட்டிருக்கிறது என்றால், SPIC building உள்ள இடத்திற்கு 33 இலட்சம் ரூபாய் என்று விலை நிர்ணயம் இருக்கிறது. அதே விலையை இன்றைக்கு கிண்டி தொழிற்பேட்டைக்கும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், 33 இலட்சம் ரூபாய் அங்கே விற்கப்படவில்லை. குறைந்தது 10 இலட்சம் ரூபாய்கூட அங்கே நிலம், ஒரு கிரவுண்ட் நிலம் விற்கப்படவில்லை என்ற நிலை அங்கே இருக்கின்றது. ஆனால், இந்த விலை உயர்வு எதற்காக அங்கே உயர்த்தப்பட்டது என்று நாங்கள் அறிகின்றபோது, கடந்த ஆட்சியின்போது இன்றைய முதல்வர் அவர்களால் அங்கே கிண்டி தொழிற்பேட்டையிலே உள்ள அந்த டான்சி

நிலம் வாங்கப்பட்டதால் இந்த விலை உயர்வு அங்கே நிர்ணயிக்கப்பட்டது என்பதை இன்றைக்குத் தொழில் முனைவோர்கள் திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். ஆதலால் இன்றைக்கு நெருக்கடியாக உள்ள இந்த நேரத்தில் இந்த முத்திரைத்தாள் 13 சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பது தொழில் முனைவோர்களைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. தயவுசெய்து இந்த அரசு இதைப் பரிசீலனை செய்து, கடந்த ஆட்சியில் இருந்ததுபோல, மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இருந்த ஒரு சதவீதம் முத்திரைத்தாளையே வாங்க வேண்டும் என்று நீங்கள் பரிசிலனை செய்து, அதை முடிவு செய்ய வேண்டும் என்று அன்போடு உங்கள் மூலமாக நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றையதினம் தொழில் துறையிலே முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக இதை ஆய்வில் கொண்டு, இப்போது ஏற்கெனவே கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் எல்லாம் தமிழ்நாட்டிலே தொழில் துறையின் மூலமாக பிற்பட்ட தொழிற்கூடங்கள், மிகவும் பிற்பட்ட தொழிற்கூடங்கள் என்று பிரித்திருக்கிறார்கள். நாங்கள் இதைக் கருத்தில்கொண்டு, இப்போது அரசு அதைப் பரிசிலனை செய்து தொழில் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். இதற்கான நடவடிக்கை கூடிய விரைவில் எடுக்கப்படும்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

10—

ஆக்கிரமிப்பை அகற்றுதல்

***12837—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள வாண்டையாங்குப்பம் கிராமத்தில் உள்ள குளம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் உள்ள வடிகால் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?